முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 1065

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

29.08.2022, திங்கட்கிழமை

1. திக்கெட்டும் பரவட்டும் அரங்கன் புகழ்
தேசமெல்லாம் நிரம்பட்டும் சன்மார்க்க நெறி
சூக்குமமாய் இந்த உலக மக்களெல்லாம்
சுத்த நெறி வந்து ஞானிகளாகட்டும் என்று கூறி
2. கூறியே அரங்கன் பெருமை பாடி
குவலயத்தில் சுப்ரமணியப்பெருமான் யானும்
தெரிவிப்பேன் அரங்கனுக்கு ஞான அறிவுரை ஆசி
(சுபகிருது வருடம் ஆவணி மாதம் 13 நாள், 29.08.2022 திங்கட்கிழமை)
தேசிகன் வழி ஞான உலகமாகவேண்டி
3. வேண்டியே அரங்கன் படைப்பே
வினை போக்கி மக்களை மீட்பதாகும்
தொண்டென அரங்கன் தொடர்புக்கு வர
தொண்டர்களாகி உலகோர் ஞானிகள் ஆக வேண்டுமென
4. என கூறி ஆறுமுகப்பெருமான் யான்
இனிதே இந்த அவதாரத்தை நிகழ்த்தி இருக்க
ஞானமென உலகில் பூர்த்திகொள்ள வேண்டுமாயின்
ஞானி அரங்கன் தொடர்புக்கு வரவேண்டும்
5. வேண்டிவேண்டி அரங்கன் ஓங்காரக்குடிலில்
விழாக்கள் தோரும் கலந்து அன்பர்களெல்லாம்
தொண்டு செய்து சன்மார்க்க நெறிக்குள்ளே
தொடர்பு கூட்டி உண்மை தயவுமிக்கவர்களாகி
6. ஆகியே அரங்கன் சீடரென
அடையாளம் கொண்டு உலகோரெல்லாம்
அகிலமெங்கும் ஞானம் பயின்று வர
அவரவர்க்கும் ஞான சித்தி உறுதியாகி
7. ஆகியே உலக மாற்றமாக அரங்கன் வழி இந்த அற்புதத்தை
ஆறுமுகன் யான் அருளவே அரங்கனுக்கு நித்தம் நித்தம்
ஆற்றலை யான் வழங்கி வர
அருள் வேண்டுமா இனி பிறவா பெரும் பேறு வேண்டுமா
8. அன்பர்களே அரங்கனை நோக்கி வந்தால் போதும்
இந்த அற்புதத்தை கண்டு தேறி
அழியாமை கொண்டு நீங்களெல்லாம்
ஞானிகளாக மாற நேரும்

9. மாறுதல் பெற அரங்கன் திருவடி பற்றி
மண்ணுலகோர் ஞான வழிக்கு வரவே
ஆறுமுகன் யான் ஞான அறிவுரை ஆசியை
ஆற்றலாக அரங்கனுக்கு தொடர்ந்து அருளி வருகின்றேன்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–